செ.வெ.எண்: 47 நாள்: 27.06.2020

**கரூர் மாவட்டம்**

**உடல்நிலை சரியில்லாதோர் வீட்டில் இருந்தே மருத்துவருடன் காணொளி மூலம் பேசி நோய்கள் குறித்த சந்தேகங்களையும் சிகிச்சை விபரங்களையும் கேட்டறியும் வகையில், மத்திய அரசின் சார்பில் "இ-சஞ்சீவனி ஓபிடி" என்ற புதிய இணையதள வசதி அறிமுகப்படுததப்பட்டுள்ளது - அனைவரும் பயன்படுத்திக்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தஅன்பழகன்.இஆப., அவர்கள் வேண்டுகோள்**

**இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:**

கொரோனா தொற்று காலத்தில் மருத்துவ சிகிச்சைக்காக பொது மக்கள் தங்களது மருத்துவத் தேவைகளை எளிதாக பெறும் பொருட்டு இந்திய அரசு https://esanjeevaniopd.in என்ற இணைய தளத்தை ஆரம்பித்துள்ளது. பொது மக்கள் தாங்களாகவே இந்த இணைய தளத்தில் தங்களைப்பற்றிய சுயவிபரம் மற்றும் நோய் பாதிப்பின் விபரங்களை பதிவுசெய்து கொள்ளலாம். தமிழகத்தில் இந்த திட்டத்தின் படி காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை இணையதளம் வாயிலாக மருத்துவர்களிடம் தொடர்பு கொண்டு நேரடியாக நோய்கள் குறித்த சந்தேகங்களையும் சிகிச்சை விபரங்களையும் கேட்டறியலாம். மேலும் ஆன்லைனிலேயே மருத்துவரின் மருந்துகள் குறித்த பரிந்துரையினை (e-prescription) பெற்று மருந்தகங்களில் மருந்து மற்றும் மாத்திரைகளை வாங்கி கொள்ளலாம்.

இந்த திட்டம் பொது மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். கொரோனா நோய் தொற்று காலத்தில் பொது மக்களிடையே நோய் பரவாமல் தடுக்கவும் வீட்டிலிருந்தபடியே தங்களது உடல்நிலை பற்றிய சந்தேகங்களை எளிதில் மருத்துவர்களிடம் கேட்டு நிவர்த்தி செய்து சிகிச்சை பெறவும் இத்திட்டம் பெரிதும் பயனுள்ளவகையில் இருக்கும்.

வீட்டிலிருந்தே பொது மக்கள் தங்கள் மற்றும் தமது குடும்ப விபரங்களை பதிவு செய்து சிகிச்சை விபரங்களை கேட்கும் போது அவர்களுக்கு மருத்துவர்கள் மற்றும் சிறப்பு மருத்துவர்கள் இணையதள வாயிலாக காணொளிக்காட்சி உரையாடல் மூலம் (VIDEO CALL) உரையாடல் சிகிச்சை, நலக்கல்வி மற்றும் ஆலோசனைகளை வழங்குவார்கள். வயதானவர்கள், தொற்றா நோய்களான ரத்தக்கொதிப்பு, சர்க்கரை நோய், இதய நோய் மற்றும் புற்று நோய் சிகிச்சையில் உள்ளவர்கள் இத்திட்டத்தால், பயன்பெறுவதோடு மட்டுமல்லாமல் மருத்துவமனை சென்றுவர ஆகும் செலவுகள் இல்லாமலும், காலவிரயம் ஏற்படாமலும் சிகிச்சைபெறலாம். மேலும், சமூக இடைவெளி கடைப்பிடிப்பதின் காரணமாகவும் நோய் தொற்றிலிருந்து தங்களையும் தங்களது குடும்பத்தையும் பாதுகாத்துக்கொள்ளலாம். மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நல்ல திட்டமாகும். இத்திட்டம் குறித்து தகவல் அறிந்த நபர்கள் உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கும் எடுத்துக்கூற வேண்டும்.

மேலும் பொதுமக்கள் தங்கள் வீடுகளுக்கு அருகில் உள்ள வீடுகளுக்கு எவரேனும் வெளியூர், வெளி மாநிலங்களிலிருந்து எவரேனும் வந்திருந்து, தங்களை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்ளாமலோ, தனிமை படுத்திக்கொள்ளாமலோ இருந்தாலும், தொழில் நிறுவனங்கள் அனுமதிக்கபட்ட நேரத்தைவிட அதிக நேரம் திறந்திருந்தாலும், பொதுஇடங்களில் சமூக இடைவெளி இல்லாத நிலை எங்கும் நிலவினாலும் அதன் விபரங்களை கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறையக்கு 04324-1077 என்ற எண்ணிலும், 04324 - 1077, 04324 - 256306, 04324 - 255340 ஆகிய எண்களிலும் தகவல் தெரிவிக்கலாம்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**